08.09.2023 எம்.சி.ஓ.பி. எண். 188/2018 ம.சா.1 பெருமாள்

குறுக்கு விசாரணை

13.12.2017 ஆம் தேதி விபத்து நடந்தது. நான் புரிசை கிராமத்தில் இருந்து வந்தவாசிக்கு சென்றேன். நான் அரசுபேருந்தில் பயணம் செய்தேன். அந்த பேருந்தின் தடம் எண்.200. அந்த பேருந்தில் தான் நான் பயணம் செய்தேன். நான் பேருந்தில் மத்தியபகுதியில் இருந்த இரண்டுபேர் அமரக்கூடிய இருக்கையில் உட்கார்ந்து பயணம் செய்தேன். நான் பயணம் செய்த பேருந்தில் பயணிகள் யாரும் நின்றுசெல்லவில்லை. விபத்து எச்சூர் வளைவில் நடந்தது, அந்த வளைவு ஆபத்தான வளைவு. விபத்துநடந்த காலத்தில் சாலையின் மத்தியில் தடுப்பு சுவர் இல்லை. தார்ரோடு மட்டும்தான் இருந்தது அதன் அகலம் 15 அடி இருந்திருக்கும். இரண்டு பேருந்துகள் எதிரெதிரே வந்தால் அந்த இடத்தில் கடந்துசெல்வது கொஞ்சம் கஷ்டமாகதான் இருக்கும். நான் பயணம் செய்த பேருந்தின் ஓட்டுநர் அவர்வழியில் தான் சென்றார். சாலையின் ஓரமாக சென்றார். நான்சென்ற பேருந்தும் எதிரில் வந்த பேருந்தும் நேருக்குநேராக மோதிக்கொண்டது. நான் பயணம்செய்த பேருந்தின் ஓட்டுநர் பேருந்தை நிறுத்தியிருந்தால் விபத்தை தவிர்த்து இருக்கலாம். நான் பயணம் செய்த பேருந்து ஓட்டுநரும், எதிரில் வந்த பேருந்தின் ஓட்டுநரும் ஒரே வேகத்தில் தான் வந்தார்கள். நான் பயணம் செய்த பேருந்தின் ஓட்டுநர் மீதும் தவறு உள்ளது, எதிரில் வந்த பேருந்து ஓட்டுநரின் மீதும் தவறு உள்ளது. நான் பயணம் செய்த பேருந்தின் ஓட்டுநர் அஜாக்கிரதையாக ஓட்டியதாலும் விபத்து ஏற்பட்டது. அரசுபேருந்தின் ஓட்டுநரையும், பேருந்தின் நிர்வாக இயக்குநரையும் வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. நான் விபத்திற்கு பிறகு வந்தவாசி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டு செங்கல்பட்டு மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். செங்கல்பட்டு மருத்துவமனையில் 15 நாட்கள் இருந்தேன். எனக்கு குணமான பிறகுதான் மருத்துவமனையில் இருந்து விடுவித்தார்கள். எனக்கு மருத்துவமனையில் எக்ஸ்ரே எடுத்தார்கள், காலிலும், மூக்கின் அருகிலும் எக்ஸ்ரே எடுத்தார்கள். மூக்கின் தண்டுபகுதியில் பாதிப்பு இருப்பதாக சொன்னார்கள்,

எலும்புமுறிவு எதுவும் இல்லை. நான் தற்போது எலக்டீரிஷயன் வேலை செய்துவருகிறேன். மாதம் ரூ.10,000/- சம்பாதிக்கிறேன். தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளராக இருந்தேன். அதற்கு அடையாள அட்டை உள்ளது அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தற்போதும் ஒப்பந்த தொழிலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு தற்போதும் அரசபணியில் வேலை கொடுக்கிறார்கள். நான் பயணம் செய்த பேருந்தின் ஓட்டுநர் அரசு ஓட்டுநராக இருந்ததால் தனியார்பேருந்து ஓட்டுநர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிட்டார்கள். காவல்துறையினர் மருத்துவமனையில் வந்து என்னை விசாரித்தார்கள். விபத்திற்கு காரணம் அரசு பேருந்தின் ஓட்டுநர் என்பதால் எனக்கு 50 சதவீத இழப்பீடு தான் எனக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.